# தேவகோட்டை நகராட்சி

தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் அவா்க்கூட்டம் தனிஅலுவலரால் 17.09.2021ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**பொருள்: 108**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.35871/2014/இ1, நாள். 08.09.2021–ன் கடிதத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021–2022–ம், ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மானியக் கோரிக்கையில் நகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குளை LED விளக்குகளாக மாற்றம் செய்யவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதால் அதற்கான கருத்துரு சமா்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**இந்நகராட்சியில் தற்போது உள்ள தெருவிளக்குகள் விபரம்:**

| | |
|---|---|
| Tube Light | 2270 Nos. (40 Watts) |
| CFL | 300 Nos. (1x45 Watts) |
| CFL | 220 Nos. (2x24 Watts) |
| SV Lamp | 110 Nos. (150 Watts) |
| SV Lamp | 92 Nos. (40 Watts) |
| High Mast (6x9) 400W Metal Halide | 54 Nos. |
| **Total** | **3046 Nos.** |

**LED விளக்குகளாக மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விபரம்.**

| | |
|---|---|
| ஏற்கனவே உள்ள தெருவிளக்குகள் LEDயாக மாற்றி அமைத்தல் | 2266 Nos. (20 Watts) |
| | 324 Nos. (40 Watts) |
| | 402 Nos. (72 Watts) |
| | 54 Nos. (200 Watts) |
| மொத்தம் | 3046 Nos |
| புதிதாக அமைக்கப்பட உள்ள LED தெருவிளக்குகள் | 400 Nos. (25 Watts) |
| மொத்தம் | 400 Nos. |
| **பெரு மொத்தம்** | **3446 Nos.** |

இதன்படி இந்நகராட்சிப் பகுதியில் மேற்காணும் விபரப்படி தெருவிளக்குகள் LED விளக்குகளாக ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் மாற்றம் செய்வதற்கான பணி மேற்கொள்வதற்கு தனிஅலுவலரின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1.மன்றம் அனுமதிக்கலாம்,

2.நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் மேற்காணும் பணி மேற்கொள்வதற்கான திட்ட பிரேரணை சமா்ப்பித்து நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்: 108**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 109

தேவகோட்டை நகராட்சியில் மத்திய அரசின் 15–வது நிதிக்குழு மானிய நிதியின் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 15.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிக்குச் சொந்தமான இராம்நகர் நுண்ணுரம் செயலாக்க மையத்திற்கு புதிய நவீன அரவை இயந்திரம் மற்றும் சலித்தல் இயந்திரம் விநியோகம் செய்தல் பணி | 14.30 | 1) Ever Green Enviroment Services, Ramanathapuram | 0.23 % குறைவு |
| | | | 2) Exsernet, Madurai | 0.84 % அதிகம் |
| 2 | தேவகோட்டை நகராட்சிக்குச் சொந்தமான சருகணி ரோடு நுண்ணுரம் செயலாக்க மையத்திற்கு புதிய நவீன அரவை இயந்திரம் மற்றும் சலித்தல் இயந்திரம் விநியோகம் செய்தல் பணி | 14.20 | 1) Ever Green Enviroment Services, Ramanathapuram | 0.25 % குறைவு |
| | | | 2) Exsernet, Madurai | 0.85 % அதிகம் |

**அலுவலக குறிப்பு: –**

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டைவிட குறைவாக பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மான எண்: 109**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 110

தேவகோட்டை நகராட்சியில் குடிநீர் பிணி 2021-2022-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 02.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சி குடிநீர் விநியோக பணிக்கு குளோரினேசன் விநியோகம் செய்யும் பணி. | 9.50 | 1) ஸ்ரீ ராஜகணபதி இல்ஜினியரிங் ஓர்க்ஸ் | 0.68 % குறைவு |
| | | | 2) ஸ்ரீ சபரி இல்ஜினியரிங் ஓர்க்ஸ் | 6.90 % அதிகம் |

**அலுவலக குறிப்பு: –**

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**<u>தீர்மான எண்: 110</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 111</u>**

தேவகோட்டை நகராட்சியில் பொதுநிதி 2020-2021-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 02.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிக்கு உட்பட்ட 8வது வார்டு குளக்கால் பகுதியில் சுத்தம் செய்தல் பணி | 1.00 | 1) திரு. T. பாண்டி | 0.20 % குறைவு |
| | | | 2) திரு. V. கணபதி | 5.77 % அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு: –</u>**

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**<u>தீர்மான எண்: 111</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 112</u>**

தேவகோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு பகுதிகளில் உள்ள மக்கள் அதிகமான அளவில் கூடும் தினசரி மார்க்கெட், பேருந்துநிலையம், கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் மற்றும் கொரோனா பரிசோதனை மையம், தடுப்பூசி முகாம்கள் போன்ற பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், இந்நகரின் அனைத்து பகுதிகளிலும் பொதுசுகாதாரப்பணிகள் மேற்கொள்ளவும் தேவையான கிருமிநாசினிகள் போதிய அளவில் இருப்பு இல்லாததால் பொது சுகாதாரப்பணிகள் பாதிக்காவண்ணம் பணி மேற்கொள்ள கீழ்காணும் விபரப்படியான கிருமிநாசினிகள் துப்பரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி வாங்க வேண்டியுள்ளது. அதன்படி

<u>கிருமிநாசினிகள் விபரம்:–</u>

1) பிளிச்சிங் பவுடர் – 5 மெ.டன்
2) நீர்த்த சுண்ணாம்பு – 20 மெ.டன்

மேற்படி விபரப்படியான கிருமிநாசினிகள் வாங்கி கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், பொதுசுகாதார பணியின்அவசர அவசியம் கருதி உடன் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும், துப்பரவு ஆய்வாளர் குறிப்பின்படி உத்தேச செலவீனம் ரூ.6,00,000/– த்திற்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொது நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) குறைவான விலை விகிதங்கள் வழங்கும் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 112</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்: 113</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் இயங்கி வந்த TN63 AX 5459 வாகனத்திற்கு தகுதி சான்று பெரும் பொருட்டு வாகனத்தின் பழுதுகள் களையவும், வாகன காப்பீடு கட்டணம் மற்றும் சாலைவரி, பசுமை வரிகள் போன்ற கட்டணங்கள் செலுத்தியும், வட்டார போக்குவரத்து ஆய்வாளர் அவர்களிடம் சான்று பெற்று பொது சுகாதாரப்பணிக்கு வாகனத்தை இயக்கவும் நகர் பகுதிகளில் பொது சுகாதாரப்பணிகள் பாதிப்படையா வண்ணம் செயல்படவும் பணியின் கொது சுகாதார அவசர அவசியம் கருதி உடன் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி உத்தேச செலவீனம் ரூ.3.50 இலட்சத்திற்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பொது சுகாதார அவசர அவசியம் கருதி உள்ளுர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவீனத்தை பொது நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 113</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்: 114</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்கு பயன்படுத்தி வரும் வாகனம் TN63 AR 5171 (Tata Ace)-த்திற்கு தகுதி சான்று பெரும் பொருட்டு வாகனத்தில் அனைத்து பழுதுகளையும் (ஒட்டுநர் குறிப்பிட்டுள்ள) சரிசெய்தும், சாலைவரி கட்டணம் செலுத்தியும், வாகனத்திற்கு தகுதி சான்று பெற்று இயக்கவும், பொதுமக்களின் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டும், பணியின் அவசர அவசியம் கருதி உடன் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி உத்தேச செலவீனம் ரூ.1.00 இலட்சத்திற்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதி விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள ஆகும் செலவீனத்தை பொது நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) குறைவான விலைவிகிதம் வழங்கும் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 114</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்: 115</u>

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்: 13–ல் அண்ணாநகர் பூங்கா உள்ளது. இப்பூங்காவிற்கு தினசரி நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வந்து செல்கின்றனர். மேலும் நடைபயிற்சி செய்து வருகிறார்கள். இப்பூங்காவை அபிவிருத்தி செய்து நடைபாதை அமைத்து, பலவிதமான பூ செடிகள், புற்கள் மற்றும் மின்விளக்குகள் அமைத்து பல்வேறு அடிப்படை பணிகள் செய்ய வேண்டியது அவசியமாகிறது. நகராட்சி அலுவலக அருகில் தியாகிகள் பூங்கா உள்ளது. இது பேருந்து நிலைய அருகில் உள்ளதால் தினசரி நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வந்து பார்த்து

மற்றும் நடைபயிற்சி மேற்கொள்கின்றனர். இப்பூங்காவில் நடைபாதை மற்றும் சுற்று சுவர் பழுதாகி உள்ளது. மேலும் பூக்கள் மற்றும் புல்வெளிகள் மின் விளக்குகள் செய்து பல்வேறு அபிவிருத்தி பணிகள் செய்ய வேண்டியது அவசியமாகிறது. இந்த இரண்டு பூங்காக்களை அபிவிருத்தி செய்ய தயார் செய்த மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 115</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்: 116</u>

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக எழுதுபொருட்கள், படிவங்கள் கணினி டோனர்கள் மற்றும் பணமதிப்பு ரசீதுகள் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்கோ சர்வீஸ் நிறுவனம் திருச்சி மூலம் 2021–2022ம், நடப்பு நிதி ஆண்டுகளில் அவசிய தேவையின் காரணத்தினால் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவீனத் தொகை ரூ.6,00,000/– இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 116</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்: 117</u>

தேவகோட்டை நகராட்சி பகுதியில் மொத்தம் 27 வார்டுகள் உள்ளது. இவ்வார்டுகளில் உள்ள நகராட்சி சாலைகளுக்கான சாலைப்பதிவேடு முழுமையாக தயாரிக்கப்படாமல் இருந்து வந்தது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படி சாலைப்பதிவேடு நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திலிருந்து வந்த பட்டியல்படி தயார் செய்வது அவசியமாகிறது. இந்நிலையில் நகராட்சி சாலைகளை சரியான அளவில் அளவீடு செய்து முடிக்க நகராட்சியில் போதிய தொழில்நுட்ப பணியாளர்கள் எவரும் இல்லாததால் தனியார் நிறுவனத்தின் மூலம் அளவீடு செய்து சாலைப்பதிவேடு தயாரித்தல் மற்றும் அதனை நகராட்சி TOWN MAP–ல் தயார் செய்து 1 முதல் 27 வார்டுகளில் உள்ள சாலைகளை சரியான அளவில் தயார் செய்ய ட்ரோன் கேமரா வைத்து அளவு செய்து அதனை CADD Drawing மூலம் தயார் செய்வது அவசியமாகிறது. எனவே சாலைப்பதிவேடு முழுமையாக தயார் செய்தல் மற்றும் TOWN MAP தயார் செய்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட தொகை ரூ.9.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 117</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்: 118</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நாள்தோறும் பொதுசுகாதாரப்பிரிவு பணியாளர்கள் மற்றும் DBC பணியாளர்கள் மூலம் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் வார்டு வாரியாக நடைபெற்று வருகின்றன. அதன்படி மேற்படி பணிக்கும், பணியாளர்களுக்கும் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினிகள் தேவையான அளவு இருப்பில்

வைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதன்படி கீழ்காணும் விபரப்படியான பொருள்கள் வாங்க வேண்டியுள்ளது.

1) 3 Ply Mask - 50,000 எண்ணம்.
2) Reusable Gloves - 1000 ஜோடி.
3) Lemon Gross Oil - 170 லிட்டர்.

மேற்குறிப்பிட்ட விபரப்படியான கிருமிநாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை வாங்கி இருப்பில் வைக்க துப்பரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி ரூ.9.90 இலட்சத்திற்கு செலவு மேற்கொள்ளவும், விலைப்புள்ளி பெற்று பணி மேல் நடவடிக்கை தொடரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) குறைவான விலைவிகிதம் வழங்கும் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 118**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 119**

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 115 தூய்மையாளர்களை கொண்டு மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை – காரைக்குடி என்பவரின் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நிறுவனத்தின் ஒப்பந்த பணிக்காலம் முடிவடைந்துவிட்ட நிலையில் பணியின் அவசியம் கருதி புதிய ஒப்பந்தப்புள்ளி கோர நகராட்சி நிர்வாக ஆணையர் – சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் சில நிர்வாக காரணங்களாலும் கொரோனா வைரஸ் காய்ச்சல் பரவல் காரணங்களாலும் இதுநாள் வரை நிர்வாக அனுமதி கிடைக்க பெறவில்லை. இந்நிலையில் பொதுசுகாதாரப் பணிகள் பாதிக்கா வண்ணம் மேற்படி நிறுவனத்திற்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பணி நீடிப்பு செய்து வழங்கப்பட்டு வந்தது. அதன்படி நிறுவனத்தின் பணிகாலம் 30.09.2021–ம் தேதியுடன் முடிவடையும் நிலையில் உள்ளது. எனவே பொதுமக்களின் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டும் பணியின் அவசரம் அவசியம் கருதி மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.10.2021 முதல் 31.12.2021 வரை பணி நீடிப்பு செய்து வேலை உத்தரவு வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவீனம் துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி ரூ.45.00 இலட்சத்திற்கு செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மூன்று மாதகால பணி நீடிப்பு வழங்க அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 119**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 120**

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் விவேகா அறக்கட்டளை தொண்டு நிறுவனம் மூலம் 45 DBC பணியாளர்களை கொண்டு 27 வார்டு பகுதிகளில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி மற்றும் கொரோனா வைரஸ் காய்ச்சல் பரவுதல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் இவர்களின் பணி நீடிப்பு காலம் 30.09.2021 அன்றுடன் முடிவடையும் நிலையில் உள்ளது. அதன்படி இந்நகர் பகுதிகளில் டெங்கு வைரஸ் காய்ச்சல் அதிகளவில் பரவி வருவதாலும், கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும், டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் தேய்வின்றி செயல்பட பொதுமக்களின்

பொதுசுகாதார நலன் கருதி பணியின் அவசிய அவசரம் கருதி மேற்படி நிறுவனத்திற்கு மேலும் மூன்று மாத காலம் (01.10.2021 முதல் 31.12.2021 வரை) பணி நீடிப்பு வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவீனம் துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி ரூ9.00 இலட்சத்திற்கு செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 120**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 121**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்: KDIS No:26369/2018/J3, நாள்:22.11.2018–ன் படியும் அரசாணை 101–ல் குறிப்பிட்ட அளவுகோலின்படியும் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு மொத்தம் 205 தூய்மை பணியாளர்கள் தேவையான நிலையில் நிரந்தர பணியாளர்கள் குறைவான நிலையில் உள்ளதால் 115 தூய்மை பணியாளர்கள் தற்காலிகமாக தனியார் நிறுவனத்தின் மூலம் பொதுசுகாதாரப் பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வந்த நிலையில் மேலும் தூய்மை பணியாளர்களின் பற்றாக்குறையினால் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள், நுண்ணுயிர் உரமாக்கப் பணி போன்றவை மிகவும் பாதிக்கப்பட்டு வந்ததன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் அனுமதி பெறும் பொருட்டு உரிய கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அலுலகத்திலிருந்து நிர்வாக அனுமதியானது கொரோனா வைரஸ் காய்ச்சல் பரவல் காரணமாக தாமதமான நிலையில் இந்நகர் பகுதிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் அதிகளவில் பரவி வருவதாலும் பொதுமக்களின் பொதுசுகாதாரம் காக்கும் பொருட்டு 27 வார்டுகளிலும் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதியும் துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படியும் தற்போது 30 தூய்மை பணியாளர்களை கொண்டு பொதுசுகாதாரப் பணிகள் மேற்கொண்டு வரும் மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை – காரைக்குடி என்பவரின் பணிக்காலம் வருகின்ற 30.09.2021 அன்றுடன் முடிவடையும் நிலையில் மேற்படி நிறுவனத்தின் பணிக்காலத்தை மேலும் மூன்று மாதகாலம் பணி நீடிப்பு செய்து வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.10.00 இலட்சத்திற்கு செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் பணி மேற்கொள்ள ஆகும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 121**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 122**

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டு பகுதிகளிலும் தினந்தோறும் உற்பத்தியாகும் 13.5 மெ.டன் திடக்கழிவுகளை 145 தூய்மை பணியாளர்களை கொண்டு தள்ளுவண்டிகள் மூன்று சக்கர மிதிவண்டிகள் மற்றும் BOV வாகனங்களின் மூலம் சேகரம் செய்யப்பட்டு அவை நகரின் குப்பை சேகரிப்பு மையங்களில் (Collection Point) கொட்டப்பட்டு அதன்பின்னர் லாரிகளில் ஏற்றி கலவை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. இந்நிலையில் நகர் பகுதிகளில் ஆடு, மாடுகள் மற்றும் பிராணிகளால் இரவு நேரங்களில் குப்பைகள் சிதறடிக்கப்பட்டு பொதுசுகாதாரத்திற்கு பொதுமக்களுக்கும் இடையூறாகவும் உள்ளது. மேலும் பொதுமக்களால் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு நேரடியாகவும் வலைதளங்கள் மூலமாகவும் புகார்கள் தொடர்ந்து தெரிவித்த வண்ணம் உள்ளன. அதன்படி நகரின் முக்கிய பகுதிகளில் இரும்பு குப்பை கொள்கலன்கள் நிறுவப்பட்டு குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள புதியதாக 10 இரும்பு

குப்பை கொள்கலன்கள் வாங்கி பயன்படுத்தவும், துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி பணியின் அவசர அவசியம் கருதியும் பொதுமக்களின் பொது சுகாதார நலன் கருத்தில் கொண்டும், உடன் விலைப்புள்ளி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொள்ள உத்தேச செலவீனம் ரூ.7.00 இலட்சத்திற்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பொதுநிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 122</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்: 123</u>

தேவகோட்டை நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கலர் காப்பியர் மெசின் (Colour Xerox Machine) கருப்பு வண்ண டோனர் மற்றும் கலர் டோனர்கள் தீர்ந்துவிட்டது. டோனர்கள் தீர்ந்துவிட்ட காரணத்தால் ஜெராக்ஸ் நகல்கள் எடுக்க முடியாமல் அலுவலக பணி பாதிக்கப்படுகிறது. மேலும் திட்ட பணிகள் அடுத்தடுத்து வருவதால் திட்ட அறிக்கைகள் தயார் செய்ய டோனர்கள் வாங்க வேண்டியது அவசியமாகிறது. மேலும் அலுவலக ஆவணங்கள் வெளியே ஜெராக்ஸ் எடுப்பதால் அலுவலக ஆவணங்கள் வெளியே தெரிய வாய்ப்புள்ளது. எனவே பணியின் அவசியம் கருதி கருப்பு வண்ண டோனர்கள் மூன்று, கலர் டோனர்கள் ஒரு செட் வாங்கிட உத்தேச செலவீனம் ரூ.85,000/– த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 123</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்: 124</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளில் இயங்கி வந்த பிரிண்டர்கள் மற்றும் மானிட்டர்கள் பழுதான நிலையில் உள்ளது. மேலும் அனைத்து பிரிவு கணிணிகளுக்கும் கீ போர்டு மவுஸ் மற்றும் Antivirus போன்றவை தேவைப்படுகிறது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி கீழ்காணும் பட்டியலில் உள்ளபடி கணிணி உபகரணங்கள் வாங்குவது அவசியமாகிறது.

| வ.எண் | பொருட்கள் | எண்ணம் |
|---|---|---|
| 1 | எச்பி லேசர் பிரிண்டர் | 4 |
| 2 | ஆல் இன் ஒன் பவர் அடாப்டர் | 2 |
| 3 | எச்பி மானிட்டர் | 2 |
| 4 | கீ போர்டு | 5 |
| 5 | மவுஸ் | 5 |
| 6 | K7 Antivirus | 10 |

மேற்காணும் கணிணி உபகரணங்கள் வாங்கிட உத்தேச செலவீனம் ரூ.25,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 124</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 125</u>**

தேவகோட்டை நகராட்சி அணைத்துப் பிரிவுகளிலும் இயங்கி வரும் கணிணிகள், பிரிண்டர்கள் மற்றும் கணிணி உபகரணங்கள் அனைத்திற்கும் வருடாந்திர பராமரிப்பு ஏதும் இல்லாத நிலையில் இயங்கி வருவதால் பழுது ஏற்படும் காலங்களில் பணிகள் பாதிக்கப்படும் நிலை உள்ளது. எனவே கீழ்காணும் பட்டியலில் உள்ளபடி இயங்கி வரும் கணிணி உபகரணங்கள் அனைத்திற்கும் ஓராண்டிற்கு வெளி கணிணி நிறுவனங்கள் மூலம் வருடாந்திர பராமரிப்பு செய்வது அவசியமாகிறது.

| வ.எண் | பொருட்கள் | எண்ணம் |
|---|---|---|
| 1 | கணிணிகள் | 15 |
| 2 | லேசர் பிரிண்டர்கள் | 5 |
| 3 | DMP பிரிண்டர் | 2 |
| 4 | காப்பியர் | 2 |
| 5 | நெட்வொர்க் வயரிங் | 17 |

மேற்காணும் கணிணி உபகரணங்களை ஆண்டு பராமரிப்பு பணி செய்திட உத்தேச செலவீனம் ரூ.1,00,000/— க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 125</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.